
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1047

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

39

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.



# பெரியாரைக் கவர்ந்த கூட்டுப்பண்ணைத் திட்டம்!

சட்ட எரிப்புப் போராட்டத்தில் கைதாகி, தோலி சுப்பிரமணியம் சிறையில் இருந்த காரணத்தால், 1958-ஆம் ஆண்டு பொங்கல் விழா கொண்டாட்டத்தையே நிறுத்திவைத்தது தோலி கிராமம். அதன்பிறகு, ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட திராவிடர் கழகத் தலைவராகத் தோலி சுப்பிரமணியம் செயல்பட்டபோது, பெரியாரோடு மேலும் நெருங்கிப் பழகினார். உள்ளூர் மட்டத்திலும் தோலியைப் பண்படுத்துவதில் பெரியாரின் பங்களிப்பு நிகரற்றதாக இருந்தது.

தொடர்ந்து 10 ஆண்டுகள் தோலி ஊராட்சி மன்றத் தலைவராகப் போட்டியின்றித் தேர்வானவர் சுப்பிரமணியம். நூலகம் அமைத்தது, சாலைகள் அமைத்தது, வடிகால் வசதிகள் ஏற்படுத்தியது என அந்தக் கிராமத்தின் வளர்ச்சியில் சுப்பிரமணியம் முதன்மை முகமாக இருந்தார்.

பேருந்து வசதிகூட இல்லாத அந்தக் காலகட்டத்திலேயே தன் 4 மகள்களையும் திருச்சி, தஞ்சை, சென்னை என வெளியூர்களுக்கு அனுப்பி கல்வி கற்கச் செய்து, பட்டதாரிகள் ஆக்கினார், அவர்களை மருத்துவராக்கினார். இவர்களைப் பார்த்து, அந்த ஊரில் இருந்த மற்ற பெண்களும் கல்வி கற்கச் சென்றனர். பெரியாரால் பெயர் சூட்டப் பட்டு, ஆசிரியர் கி.வீரமணியால் திருமணம் செய்து வைக்கப் பட்ட அவரின் மகன் மதிவாணன், 1990-களில் உடல்நலக்குறைவால் மறைந்தபோது, எவ்விதச் சடங்குகளும் இல்லாமல் அடக்கம் செய்ததோடு, தன் மகள்களை சுடுகாடு வரை வரச் செய்தார். அதன் பிறகு, இறுதி நிகழ்ச்சிகளில் தோலியில் பெண்கள் சுடுகாட்டுக்குச் செல்வது இயல்பானது.

பல சுயமரியாதைத் திருமணங்களையும் நடத்தி வைத்தார். அதுவே, தன் வாழ்வின் பெருமை எனத் தனது டைரி குறிப்புகளில் சுப்பிரமணியம் எழுதி வைத்துள்ளார். ஆனால், இதைவிட முக்கியமாக, பெரியாரைக் கவர்ந்த மற்றொரு வேலையை சுப்பிரமணியம் மேற்கொண்டார். கூட்டுறவுச் சங்கங்கள்கூட வலுப்பெறாத அந்தக் காலகட்டத்தில், 'தோலி இராமசாமி கூட்டுப்பண்ணைத் திட்டம்' என்ற புதுமையான முயற்சியை, பெரியாரை அழைத்து அவர் தொடங்கி வைத்தார். அந்த விழாவில் பேசிய பெரியார், 'ரஷ்யாவுக்குப் பயணம் சென்றபோது, இத்தகைய கூட்டுப்பண்ணைத் திட்டத்தைப் பற்றி அறிந்துள்ளேன். இதேபோல பெண்களை சமையலறையில் இருந்து விடுவிக்கும் கூட்டு சமையலறை முயற்சிகள் நம் நாட்டில் உருவாக வேண்டும்' என்று பேசினார். இந்தக் கூட்டுப்பண்ணைத் திட்டம் பின்னாளில் தோலி விவசாயிகள் பெனிஃபிட் ஃபண்ட் திட்டமாக மருவி, 1990-கள் வரை செயல்பட்டது.

இத்தகைய புதுமையான முயற்சிகளால், மறைந்து 14 ஆண்டுகள் ஆன பின்பும்கூட தோலியின் நினைவுகளில் இருந்து நீங்காமல் நிலைத்திருக்கிறார் சுப்பிரமணியம்.

...பயணிப்போம்.



பெண் பிள்ளைகள் பிறந்தாலே சுமை என்று கருதிய காலத்தில், வீட்டைவிட்டு வெளியே அனுப்பவே தயங்கிய காலத்தில் எங்களை வெளியூருக்கு அனுப்பி படிக்க வைத்தார். எங்களைப் பார்த்து, ஊரில் உள்ள மற்ற பெண்களும் படிக்க முன்வந்தனர். அது, தோலியில் நிகழ்ந்த முக்கியமான மாற்றம்.

**- மருத்துவர் கலைச்செல்வி, சுப்பிரமணியத்தின் மூத்த மகள்.**



எங்கள் நிலத்தில் வேலைபார்த்த எல்லோரையும் அப்பா சரிசமமாக நடத்துவார். தாழ்த்தப்பட்டவர்கள் பலருக்கு எங்கள் நிலத்தைப் பட்டா போட்டுக் கொடுத்து, வீடு கட்டிக்கொள்ளச் செய்தார். கல்வி சார்ந்த உதவிகள் எதுவென்றாலும் செய்து தருவார். பெரியார் காண விரும்பிய சமத்துவத்தைச் செயல்படுத்திக் காட்டியவராக அப்பா இருந்தார்.

**- நிர்மலா, சுப்பிரமணியத்தின் இரண்டாவது மகள்.**

---

## உருவாக்குவதல்ல, அவர்களின் கொள்கை!

நாட்டின் பொருளாதாரம் படுபாதாளத்துக்குச் சென்று கொண்டிருக்கின்ற நிலையில், இந்தியப் பொருள்களுக்கு அமெரிக்கா, வரி மேல் வரி போட்டுக் கொண்டிருக்கும் நிலையில், அவற்றையெல்லாம் சரிசெய்ய முயற்சி செய்யாத ஒன்றிய மோடி அரசு, 'வந்தே மாதரம்' பாடலின் மீது, சர்ச்சை உருவாக்கி, நாடாளுமன்றத்தில் வாதம் கொண்டு வருகின்றனர். இது தொடர்பாக, சமூக ஆர்வலர் பா.பிரேம் என்பவரின் முகநூல் பதிவு கவனிக்க வைக்கிறது. அதிலிருந்து,

'தமிழ்நாட்டின் முன்னேற்றத்திலும்... தமிழ்நாட்டின் பி.சி, எம்.பி.சி, பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடி மக்கள் பெற்றிருக்கும் உரிமைகளில் எப்படி பா.ஜ.க.வுக்கு துளிகூட பங்கு கிடையாதோ, அதே போலத்தான் இந்தியா சுதந்திரம் அடைந்ததிலும்... இந்தியா குடியரசு ஆனதிலும்... இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கியதிலும்... இந்தியாவில் புதிய கல்வி நிறுவனங்களை உருவாக்கியதிலும் பி.ஜே.பி.க்கு துளிகூட பங்கு கிடையாது.

பி.ஜே.பி.யின் கொள்கை, மதவெறுப்பைப் பரப்பி, இஸ்லாமியர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக மாற்றுவது. பட்டியலின, பழங்குடியின மக்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை எல்லாம் மீண்டும் பழைய மனுசாஸ்திர காலத்துக்கே எடுத்துச் செல்வதுதான். அவற்றை நோக்கிதான் அது நடைபோட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில்தான், மோடிக்கு 'வந்தே மாதரம்' பாடல் ஞாபகத்துக்கு வந்து, அதுகுறித்துப் பேச வாய் திறந்திருக்கிறார்.

இது தொடர்பாக, நாடாளுமன்றத்தில்

சஞ்சய் சிங் என்கிற எம்.பி.யின் உரை

ஆர்.எஸ்.எஸ்.காரர்களின் முகத்திரையைக் கிழித்துள்ளது.

'வந்தே மாதரம்' என்று முழக்கமிட்டு சிறை சென்ற ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் நான்கு பேர் பெயரைச் சொல்லுங்கள்...

அதுவே, பிரிட்டிஷ்காரனிடம் உறவு கொண்டவன் பெயரை பா.ஜ.க.விடம் கேட்டால் நூறு பெயரைச் சொல்வார்கள்" என்று நாக்கைப் பிடுங்கிக்கொள்ளும்படி கேட்டிருக்கிறார்.

ஆனால், பி.ஜே.பி.க்கோ மோடிக்கோதான் இதெல்லாம் உறைக்கவே உறைக்காதே' என்கின்றன, அவரது எழுத்துகள்.

---

## ஃப்ளாஷ்பேக்





ஆர்.கௌதமன்

### மகனுக்குக் கிடைத்த வாய்ப்பு! எனக்குக் கிடைத்த மகிழ்ச்சி!

2015-ஆம் ஆண்டு மே மாதம், என் மகன் இளமாறன் பிறந்த நாளின்போது, தானைத்தலைவரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். திருவருளைக் கண்டது போல எனக்கு உணர்ச்சிப் பெருக்கு அப்போது ஏற்பட்டது. என் தாத்தா தம் தலைவரை தூரத்திலிருந்தே பார்த்து மகிழ்ந்தவர். எனக்கு 30 வயதில் நம் தலைவரை அருகில் காணும் வாய்ப்பு கிடைத்தது. என் மகன் இரண்டு வயதிலேயே அருகில் நிற்கும் பேறு பெற்று விட்டான்.

**– ஆர்.கௌதமன்,**
**தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி,**
**141 'அ' வட்டப் பகுதிப் பிரதிநிதி,**
**சென்னை தென் மேற்கு மாவட்டம்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

89

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."




# மாற்றத்துக்குத் தயாராகும் புதுச்சேரி!

***'புதுச்சேரி அரசு போல தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு இல்லை' என்றும், 'புதுச்சேரி மக்கள் தி.மு.க.வை நம்பாதீர்கள்' என்றும் அங்கே ஒருவர் பிரச்சாரம் செய்திருக்கிறாரே?***

புதுச்சேரியில் நடப்பது பா.ஜ.க. கூட்டணி ஆட்சி. அதை ஒருவர் பாராட்டிவிட்டு, அங்கே எதிர்க்கட்சியாக உள்ள தி.மு.க.வைத் திட்டுகிறார் என்றால், பா.ஜ.க.வுக்கு எப்போதும் பயந்து பம்முகிற ஆளாகத்தான் இருக்க முடியும். புதுச்சேரிக்கான மாநில அந்தஸ்து உள்ளிட்ட பல கோரிக்கைகள் ஒன்றிய அரசால் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. நீண்டகால கோரிக்கைகள் ஒருபுறம் இருந்தாலும், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய மாநிலத்தில் உள்ள என்.ஆர்.காங்கிரஸ்-பா.ஜ.க. கூட்டணி அரசு அதைக்கூட செய்யவில்லை. தமிழ்நாட்டில் ரேஷன் கடைகள் மூலம் பொது விநியோகத் திட்டம் சிறப்பாக நடைபெறுவதைப் பிற மாநிலங்கள் அறிந்துகொண்டு பின்பற்றுகின்றன. இந்தக் கட்டமைப்பை வலிமைப்படுத்தியவர் கலைஞர். 2006-2011 தி.மு.க. ஆட்சியின்போது உச்ச நீதிமன்றத்தில் பொது விநியோகத் திட்டம் தொடர்பான ஒரு வழக்கை விசாரித்த நீதிபதிகள், 'பொது விநியோகத் திட்டத்தை எப்படி செயல்படுத்துவது என்பதை தமிழ்நாட்டைப் பார்த்து கற்றுக்கொள்ளுங்கள்' என்றனர். ஆனால், புதுச்சேரியில் நடைபெறும் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் ரேஷன் கடைகள் முறையாகச் செயல்படுவதில்லை. தீபாவளி பொருள்கள் வழங்குவதற்காகத் திறந்து, திரும்பவும் மூடிய ரேஷன் கடைகளும் உண்டு. இதைப் பிரச்சாரத்தில் சொன்னவரே, புதுச்சேரி அரசை எதற்காகப் பாராட்ட வேண்டும்?

கல்வி, சுகாதாரம், அடிப்படைக் கட்டமைப்புகள் இவற்றில் முந்தைய ஆட்சிக்காலங்களில் சிறப்பாக இருந்த புதுச்சேரியை, கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல சீரழித்திருக்கிறது பா.ஜ.க. கூட்டணி ஆட்சி. புகழ்பெற்ற பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்திலேயே மதவெறி சங்கிகள் கொட்டம் அடித்து தரத்தைக் கெடுத்து வருகிறார்கள்.

புதுச்சேரியில் 1969-இல் தி.மு.க. சார்பில் எம்.ஓ.ஹெச். பாரூக், 1980 மற்றும் 1989-இல் டி.ராமச்சந்திரன், 1996-இல் ஜானகிராமன் ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். அப்போது, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளின் உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப் பட்டன. காங்கிரஸ் முதல்வர்கள் ஆட்சியிலும் இது தொடர்ந்தது. தமிழ்நாட்டிலிருந்து புதுச்சேரி செல்லும் மக்கள், நம் மாநிலத்திலும் இப்படிப்பட்ட சாலை வசதிகள் வேண்டும் என்று விரும்பினார்கள். பா.ஜ.க. கூட்டணி ஆட்சி செய்யும் புதுச்சேரி - காரைக்கால் பகுதிகளின் இன்றைய நிலைமையைப் பார்த்து, அங்குள்ள மக்கள் தமிழ்நாட்டைப் போல தங்கள் புதுச்சேரி எப்போது மாறும் என்கிற ஏக்கத்தில் இருக்கிறார்கள் என்பதே உண்மை நிலை.

'மகளிர் உரிமைத்தொகை', 'புதுமைப் பெண்', 'காலை உணவுத் திட்டம்', 'மக்களைத் தேடி மருத்துவம்' உள்ளிட்ட தமிழ்நாட்டின் திட்டங்கள் தங்கள் மாநிலத்துக்கு எப்போது வரும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கிறார்கள் புதுச்சேரி மக்கள். பா.ஜ.க. கூட்டணி அரசின் சீர்கேடுகளை எதிர்த்து, தங்கள் மாநிலத்தில் போராட்டக் குணம் மிக்க எதிர்க்கட்சியாக உள்ள தி.மு.க., தொடர்ந்து மக்களுக்காகப் போராடி வருவதையும் அறிந்தே இருக்கிறார்கள்.

ஒரு நாள் கூத்தில் கோமாளி வேடம் போடும் பகல் வேடப் பிரச்சாரத்தை புதுச்சேரி மக்கள் ஒருபோதும் நம்ப மாட்டார்கள்.

...வினா தொடரும்.

---

## நம் வரலாறு

### குடியரசு நாள் வாழ்க!

1965, ஜனவரி 26, குடியரசு நாளை துக்க நாளாக அறிவிக்கும் போராட்டத்தின்போது, பேரறிஞர் அண்ணா மிகத் தெளிவான விளக்கம் அளித்தார். "குடியரசு முறை கண்டு துக்கப்படுவதல்ல நமது நோக்கம் - நமது கண்டனமும், துக்கமும் இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவதைக் குறித்துதான். 'குடியரசு வாழ்க! இந்தி ஆட்சி மொழி ஆக்கப்படுவது ஒழிக!, என்பதுதான் நமது முழக்கம், நோக்கம், கொள்கை" என தெளிவான விளக்கம் அளித்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131